அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்

## ஆண்டு 12

நேரம்: 180 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

**மொத்தப்புள்ளிகள்: 100**
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

**பக்கங்கள்** 20

சுட்டெண்:

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. உயிர்மெய்க் குற்றெழுத்துகளின் எண்ணிக்கை
   1. 126
   2. 7
   3. 90
   4. 5

2. தமிழில் வெளிவந்த முதல் புதினம்
   1. பிரதாப முதலியார் சரித்திரம்
   2. கமலாம்பாள் சரித்திரம்
   3. குயில் பாட்டு
   4. குடும்பவிளக்கு

3. கங்குல், நிசி, அல் என்பன குறிக்கும் ஒரு சொல்
   1. பகல்
   2. நண்பகல்
   3. அதிகாலை
   4. இரவு

4. புலம்பெயர் தமிழரால் கற்றல் துணைக்கருவிகள் வழங்கப்பட்டன. இச்சொல்லியம்
   1. பிறவினை
   2. செயப்பாட்டுவினை
   3. எதிர்மறை
   4. செய்வினை

5. ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த ஏனையோர் வழங்கும் புகழுரை
   1. பதிப்புரை
   2. ஏற்புரை
   3. அணிந்துரை
   4. முன்னுரை

6. எண்ணிக்கைப் பாகுபாட்டு அடிப்படையில் ஐந்து பாடல்களைக் கொண்ட சிற்றிலக்கிய வகை
   1. பஞ்சகம்
   2. சதகம்
   3. பதிகம்
   4. அந்தாதி

7. கெடுதல், தோன்றல் ஆகிய மாற்றங்களைப் பெற்று வந்த சொல்
   1. வட்டநிலா
   2. தமிழமுதம்
   3. கற்சிலை
   4. களப்பலி

8. அளவோடு பழக வேண்டும் என்ற கருத்தை விளக்கும் பழமொழி
   1. கனவில் கண்ட பணம் செலவுக்கு உதவாது
   2. கிட்டாதாயின் வெட்டென மற
   3. குந்தியிருந்து தின்றால் குன்றும் மாளும்
   4. கிட்டப்போனால் முட்டப் பகை

9. 1983இல் 53 அரசியல் கைதிகள் சிங்கள அரசால் படுகொலை செய்யப்பட்ட சிறைச்சாலை
   1. வெலிக்கடை
   2. யாழ்ப்பாணம்
   3. கண்டி
   4. மட்டக்களப்பு

10. காரணச் சிறப்புப்பெயர்
   1. மரம்
   2. நாற்காலி
   3. மூக்குத்தி
   4. வாழையிலை

11. காலங்காலமாகத் தாம் வாழ்ந்த நாட்டிலிருந்து வெளியேறி வேறொரு நாட்டில் வாழுதல்
   1. குடிவரவு
   2. புலப்பெயர்வு
   3. குடியேற்றம்
   4. இடப்பெயர்வு

12. இலக்கணவகைப் பாகுபாட்டுச் சொல்
   1. திசைச்சொல்
   2. பெயர்ச்சொல்
   3. திரிசொல்
   4. இயற்சொல்

13. புளி + பழம் என்பதைப் புணர்த்தினால்
   1. புளிப்பழம்
   2. புளிபழம்
   3. புளித்தபழம்
   4. புளியம்பழம்

14. மாவீரர்களது ஈடிணையற்ற ஈகம் போற்றுவதற்குரியது. ஈடிணை என்பது
   1. அடுக்குத்தொடர்
   2. இரட்டைக்கிளவி
   3. இணைமொழி
   4. அடுக்கிடுக்குத்தொடர்

15. உள வீரத்துள் அடங்காதது
   1. உடல் வலு
   2. மனவுறுதி
   3. தன்னம்பிக்கை
   4. துணிவு

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

16. நானும் நீயும் நாடகம்
   1. நடிப்போம்
   2. நடிப்பேன்
   3. நடிப்பார்கள்
   4. நடிப்பீர்கள்

17. சிம்மாசனம் என்பதன் சொற்பொருள்
   1. அரண்மனை மாடம்
   2. அரசனின் செங்கோல்
   3. அரசனின் இருக்கை
   4. வெண்கொற்றக் குடை

18. கார்டுவெல் எழுதிய நூல்
   1. தொன்னூல் விளக்கம்
   2. திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்
   3. தேம்பாவணி
   4. நன்னூல்

19. நாளை மாணவர்களோடு ஆசிரியரும் சேர்ந்து விளையாடுவார். இதில் வேற்றுமை உருபேற்ற சொல்
   1. ஆசிரியர்
   2. நாளை
   3. விளையாடு
   4. மாணவர்கள்

20. பின்வருவனவற்றுள் விகுதியால் காலங்காட்டும் சொல்
   1. வாழ்த்தினாள்
   2. பறக்கும்
   3. பாய்கிறது
   4. எழுவார்கள்

21. சிந்துவெளிப் பரப்பில் நாகரிகத்தின் மேம்பட்ட நிலையில் வாழ்ந்தவர்கள்
   1. ஆரியர்
   2. இசுலாமியர்
   3. தமிழர்
   4. மராட்டியர்

22. மெய் முன் உயிர் புணர்ந்த சொல்
   1. உயிராயுதம்
   2. மாலைக்காட்சி
   3. புயற்காற்று
   4. பனையோலை

23. பொருட்காட்சிக்கு நுழைவுக் கட்டணமாகத் தலைக்கு நான்கு யூரோ அறவிடப்பட்டது. இச்சொல்லியம்
   1. குணவாகுபெயர்
   2. பொருளாகுபெயர்
   3. இடவாகுபெயர்
   4. சினையாகுபெயர்

| 1 | 2 | 3 | 4 |
| --- | --- | --- | --- |
| | | | |

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

24. தமிழரது வழிபாட்டுமுறை
    1. தீ வளர்த்தல்
    2. விலங்குகளைப் பலியிடுதல்
    3. பூக்கொண்டு வழிபடுதல்
    4. வேள்வி செய்தல்

25. பெயராகவும் வினையாகவும் வரும் சொல்
    1. உண்
    2. நடி
    3. உடை
    4. இடை

26. மருத நிலத்துக்குரிய அகத்திணை ஒழுக்கம்
    1. இரங்கல்
    2. இருத்தல்
    3. ஊடல்
    4. பிரிதல்

27. அவன் ஒரு சிறந்த பாடகன்
    1. அல்லன்
    2. அல்ல
    3. அன்று
    4. அல்லை

28. 'தமிழ்மொழி அகரமுதலியின் தந்தை' எனப் போற்றப்படுபவர்
    1. யி.யு. போப்
    2. கார்டுவெல்
    3. எலியேசு
    4. வீரமாமுனிவர்

29. ஓடுபாதை என்பது
    1. உவமைத்தொகை
    2. பண்புத்தொகை
    3. வினைத்தொகை
    4. வேற்றுமைத்தொகை

30. 'கலிங்கத்துப் பரணி'யின் பாட்டுடைத் தலைவன்
    1. குலோத்துங்கசோழன்
    2. இராசராசசோழன்
    3. பராந்தகசோழன்
    4. கரிகாற்சோழன்

30 X 1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பழந்தமிழ் இலக்கியங்கள் அகத்திணை ஒழுக்கங்களை எவ்வாறு வகைப்படுத்தின?

2. புலம்பெயர் இலக்கியங்களின் உள்ளடக்கங்களுள் இரண்டை எழுதுக.

3. திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுள் ஒன்றை எழுதுக.

4. ஆரியரின் அரசியல் ஊடுருவலால் தமிழகம் எவ்வாறு வலுவிழந்தது?

5. வாழ்த்துகின்றனர் என்ற பகுசொல்லின் பகுதியையும் சாரியையும் கண்டறிந்து எழுதுக.

   பகுதி:

   சாரியை:

6. கீழ்வருவனவற்றுக்கு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

   பிறவினை:

   எதிர்மறை ஏவல்:

7. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

   உரிச்சொல்:

   இணைப்பிடைச்சொல்:

   பொதுமொழி:

   உம்மைத்தொகை:

5 X 2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ளனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.

1. மறப்போமா? முள்ளிவாய்க்கால் பேரவலத்தை!
   என்று தொடங்கி, எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

2. படத்துக்கான கவிதையை எட்டு வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



3. பாடலுக்கான பொருளுரையை எழுதுக.

> மக்களுக்கு மா நிலத்தில் வாழ்க்கை வழிகளெல்லாம்
> சிக்கலறக் காட்டி நலம் செய் நூலாம் – மிக்க புகழ்ச்
> செந்தமிழ்ச் செல்வத் திருக்குறளை நெஞ்சமே
> சிந்தனை செய்வாய் தினம்

10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.

இயற்கையைப் பாதுகாப்போம் எனக் கூறும் மாந்தர் உண்மையில் இயற்கையைப் பாதுகாக்கின்றனரா? ஒவ்வொருவரும் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது. இயற்கையில் தோன்றியும் இயல்பாய் இயங்கியும் காலம், இடம் ஆகியவற்றுள் அடங்கியும் காணப்படுவது இயற்கை. இயற்கை, மாந்த வாழ்வுக்குக் கிடைத்த உயர்வான கொடையாகும். இயற்கையின் தன்மை மாறுபடாமல் இருக்குமானால், வளம் கொழிக்கும் நாடாக அந்நாடு திகழும். இன்று தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகவும் மக்கள் தொகை அதிகரிப்பதாலும் இயற்கையின் இயல்புநிலையில் பெரும் மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வீதியிலும் பலநூறு உந்துகள் செல்கின்றன. தொழிலகங்களில் பொருள்களின் உருவாக்கத்தை அதிகரிப்பதற்காகப் பொறிகள் அதிகளவில் இயங்குகின்றன. வானத்தில் விண்ணுந்துகளும் விண்கலங்களும் வெளிவிடும் புகைமண்டலம் ஓசோன் படையை விலக்கி, நச்சுவளியை வளிமண்டலத்துள் ஊடுருவச் செய்கிறது. இவ்வாறாகச் சூழல் மாசடையும்போது மக்கள் நோய்ப் பரவலுக்கு ஆளாகின்றனர். விலங்குகள் இறக்கும் நிலை ஏற்படுகிறது. மாந்தர் தமது இயல்பான வாழ்க்கையை இழந்து அல்லல்படும் நிலை உருவாகிறது. மாந்தர் இயற்கையோடு இயைந்து நோயற்ற இன்பமான வாழ்வு வாழ வழிவகுக்க வேண்டும்.

10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள உரைப்பகுதியை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஆங்கிலம்:**

Since Tamil is the language of learning for students living in our homeland, they speak and write without grammatical errors. However, this opportunity is not available for Tamil students living in the diaspora because the language of the country of residence becomes the language of learning. Therefore, they must speak and write in that language. Nonetheless, they eagerly learn their mother tongue, Tamil. Our young generation, who will work for the preservation of Tamil in the future, should act in a manner that facilitates the easy development of Tamil language knowledge for the next generation.

**யேர்மனி:**

Da die Unterrichtssprache für die Schüler in unserem Heimatland Tamil ist, können sie es ohne Grammatikfehler sprechen und schreiben. Diese Möglichkeit besteht jedoch nicht für tamilische Schüler in der Diaspora. Denn für sie ist die Landessprache ihres Wohnortes auch die Unterrichtssprache. Sie müssen also in dieser Sprache sprechen und schreiben. Trotzdem lernen sie mit großem Interesse ihre Muttersprache Tamil. Das gemeinnützige Engagement für die tamilische Sprache in der Zukunft wird zur Aufgabe unserer jungen Generation! Sie müssen sich dafür einsetzen, dass die tamilischen Kenntnisse auf einfache Weise an die nächsten Generationen weitergegeben werden.

**நோர்வே:**

Elevene som bor på hjemlandet snakker og skriver tamilsk uten grammatiske feil fordi de har det som hovedmål. Denne muligheten har ikke elever som bor i utlandet,  fordi de har et annet språk som hovedmål på deres bosted. Derfor må de lære seg å snakke og skrive det språket. De lærer seg sitt morsmål, tamil, med engasjement likevel. I fremtiden er det den yngre generasjon som må bevare tamil. De må derfor fasilitere  for en enkel videreføring for neste generasjon.

**இத்தாலி:**

Per gli studenti che vivono nella nostra patria, avendo la lingua Tamil come lingua di insegnamento, loro parlano, scrivono senza errori grammaticali. Però, questa opportunità non è disponibile agli studenti Tamil che sono emigrati. Perchè, per loro la lingua del paese di residenza è la lingua di insegnamento. Quindi si deve parlare e scrivere in quella lingua. Tuttavia, imparano la loro madrelingua Tamil con interesse. In futuro coloro che svolgeranno il servizio per il Tamil sono le nostre giovani generazioni! Loro dovranno agire in modo da aiutare le prossime generazioni a sviluppare facilmente la conoscenza della lingua Tamil.

**நெதர்லாந்து:**

Omdat de leertaal Tamil is in ons thuisland, spreken en schrijven de studenten daar de taal grammaticaal goed. Maar, de Tamilse studenten die gevlucht zijn hebben deze kans niet. Dit komt omdat zij een andere leertaal hebben in hun land. Daarom moeten zij deze taal spreken en schrijven. Maar nog steeds leren zij de Tamilse taal met veel interesse. Degenen die in de toekomst het Tamil onderwijs zullen voortzetten, is onze volgende generatie. Zij moeten de kennis van de Tamilse taal gemakkelijk overbrengen naar de volgende generaties.

## டென்மார்க்:

Da tamil er et undervisningssprog for elever, der bor i vores hjemland, er de i stand til at tale og skrive sproget uden grammatiske fejl. Men denne mulighed er ikke tilgængelig for tamilske studerende, der bor i udlandet. Dette skyldes at deres undervisningssprog, er det sprog, der tales i det land, de bor i . Derfor skal de tale og skrive på det sprog. Dog lærer de deres modersmål tamil med interesse. I fremtiden, vil udvikling af tamilske sprogkundskab blive udført af vores unge generation! Der forventes at de vil være i stand til at gøre undervisning af tamilske sprogkundskaber nemt for den næste generation.

## சுவீடன்:

Eftersom tamil är inlärningsspråket för elever som bor i vårt hemland, talar och skriver de utan grammatiska fel. Men denna möjlighet har inte tamilska elever som bor i andra länder. Eftersom språket i det landet de bor på är deras inlärningsspråk. Därför måste de tala och skriva på det språket. Trots det lär de sig modersmålet tamil med entusiasm. Det är vår unga generation som kommer att ta upp tamilskt tjänst i framtiden! De bör agera på ett sådant sätt som hjälper nästa generation att lätt utveckla tamilska språkkunskaper.

## பின்லாந்து:

Meidän kotimaassa asuville opiskelijoille tamili on opiskelukielenä, siksi he puhuvat ja kirjoittavat ilman kielioppivirheitä; Mutta tämä mahdollisuus ei ole diasporassa asuva tamili opiskelijoille. Koska, heille asuinmaan kieli on opiskelukielenä. joten, tarve puhua ja kirjoittaa sillä kielellä. Kuitenkin, he oppivat äidinkieli tamilia mielenkiinnolla.Ne, jotka tekevät tamilityötä tulevaisuudessa, ovat meidän nuori sukupolvemme! Tulisi toimia, että se auttaa seuraavaa sukupolvea kehittämään tamilin kielen taitoa helposti.

## தமிழ்

10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. சிற்றிலக்கியங்கள்
2. வைர அட்டிகை - சிறுகதை
3. புலம்பெயர் தமிழர் வாழ்வியல்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - வாழிடநாட்டு வாழ்வியல், தமிழர் வாழ்வியல்
   - இளையோரது பண்பாட்டு முரண்பாடுகள்
   - முதியோரது இடர்ப்பாடுகளும் தீர்வுகளும்
4. இன்றைய உலகின் பொருளியல் நெருக்கடிகள்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - பொருளியல் நெருக்கடிக்கான காரணங்கள்
   - மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள்
   - தீர்ப்பதற்கான வழிமுறைகள்

15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

### 1 பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் ‘சிங்களம் மட்டும் ஆட்சிமொழி’ என்ற சட்டத்தை எதிர்த்து அமைதிவழிப் போராட்டங்களில் ஈடுபட்டார். 1956ஆம் ஆண்டில் தலைமை அமைச்சராக இருந்த பண்டாரநாயக்காவை அவர் சந்தித்து, தமிழ்மொழிக்குச் சமவுரிமை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். அக்கோரிக்கையில், ‘சிங்களமொழியுடன் தமிழ்மொழிக்கும் சமவுரிமை வழங்கப்படுகிறது’ என்று பிரித்தானிய அரசால் எழுதப்பட்டு கையொப்பமிடப்பட்ட ஆவணத்தைக் கோடிட்டுக் காட்டினார். பண்டாரநாயக்கா அதை மறுத்து, ‘தமிழரை வாள்முனையில் அடக்குவேன்’ என்று ஆணவத்துடன் அடிகளாருக்குக் கூறினார். இதனால், நாடெங்கும் தமிழ் மக்கள் புரட்சி செய்தனர். இதன் காரணமாக, பண்டாரநாயக்கா தமிழர் தந்தை செல்வநாயகம் அவர்களுடன் மாநில தன்னாட்சி வழங்க இணங்கும் ஒப்பந்தம் ஒன்றை 1957இல் செய்து கொண்டார். அதற்குப் பண்டா - செல்வா ஒப்பந்தம் என்று பெயர். இதனைப் புத்தபிக்குகளும் சிங்களக் கடும் போக்காளர்களும் எதிர்த்தனர். இதனால், இவ்வொப்பந்தம் கிழித்து எறியப்பட்டது.

1. பண்டாரநாயக்கா ஆணவத்துடன் அடிகளாருக்குக் கூறியது யாது? — 2 புள்ளிகள்

_______________________________________________

_______________________________________________

2. சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற சட்டத்தை எதிர்த்தவர் யார்? — 2 புள்ளிகள்

_______________________________________________

_______________________________________________

3. பண்டா - செல்வா ஒப்பந்தம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது? — 2 புள்ளிகள்

_______________________________________________

_______________________________________________

4. தமிழர் தந்தை எனக் குறிப்பிடப்படுபவர் யார்? — 1 புள்ளி

_______________________________________________

_______________________________________________

5. பிரித்தானிய அரசால் கையொப்பம் இடப்பட்ட ஆவணத்தில் குறிப்பிட்டிருந்த செய்தி யாது? — 2 புள்ளிகள்

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

9 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள உரைப்பகுதிகளை வாசித்து, அவற்றுக்கு மிகப்பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்து எழுதுக.

**(ஒரு தலைப்பை ஒருமுறை மட்டுமே பயன்படுத்தலாம்)**

**தலைப்புகள்:**

- வீடு வாடகைக்கு
- வீட்டுத்திட்ட இசைமாலை
- தோட்டங்கள் விற்பனைக்கு
- வீடு விற்பனைக்கு

1. ____________________

மாந்தரின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று இருப்பிடம். இல்லங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்பது பற்றிய கனவுகள் உங்களுக்கு இருக்கும். மூன்று படுக்கையறைகளுடன் எல்லா வசதிகளையும் கொண்ட கனவு இல்லங்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. இவை அமைதியும் இயற்கையழகும் நிறைந்த சூழலில் அமைந்திருக்கின்றன. உந்து நிறுத்தும் இடமும் உள்ளது. இன்றிலிருந்தே எமது இணையத்தளத்தின் ஊடாக முன்பதிவு செய்து கொள்ளலாம்.

எமது இணையத்தள முகவரி: akarankanavuillam.com

2. ____________________

தாயகத்தில் சென்ற ஆண்டு இறுதியில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கால் பல்லாயிரக் கணக்கானோர் தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர். அவர்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் பணியைப் பல புலம்பெயர் அமைப்புகள் முன்னெடுத்துள்ளன. எமது மேஜர் சிட்டு இசைக்கழகமும் இப்பணிக்கு உதவுவதற்காக இசை மாலை ஒன்றை நடத்தவுள்ளது. நுழைவுச்சிட்டைகளைப் பெற்று, தாயக உறவுகளுக்கு உதவிடுவீர்!

3. ____________________

எம்மிடம் இரண்டு படுக்கையறைகள் உடன் 60 ச.மீ. பரப்பளவைக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. உந்து நிறுத்தும் இடவசதி இல்லை. ஆனால், ஐந்து மணித்துளிகள் நடைதூரத்தில் தொடருந்து நிலையமும் பேருந்து நிலையமும் அமைந்திருக்கின்றன. அத்துடன் நடந்து செல்லக்கூடிய தூரத்தில் அங்காடி, முன்பள்ளி, பள்ளி என்பனவும் இருக்கின்றன. வாடகை, முன்பணம் போன்றவற்றுக்குத் தொலைபேசியில் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

தொலைபேசி எண்: 0047 859 78 005

3 X 2 = 6 புள்ளிகள்

குறிப்பு:

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 09 | | | |
| 2 | 06 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |